ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1788/41 - 2012 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.12.14
*1788/41 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012.*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 59 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 61 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 30.

**ஒழுங்குவிதி**

1996 ஆம் ஆண்டு சனவரி 30 ஆந் திகதிய 1430/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் வெகுமதிக் கொடுப்பனவு ஒழுங்குவிதிகள், அவற்றின் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகிறது.

"2. சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்கான வெகுமதியாக, ஒவ்வொரு விடயத்துக்காகவும் கடற்றொழில் வெகுமதி நிதியத்திலிருந்து செலுத்தப்படக்கூடிய அதிகபட்ச பணத்தொகை ஐந்து இலட்சம் ரூபாவாதல் வேண்டும். ( 500,000 ரூபா)".

12- 889